**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.**

**அ.வ.எண்.195/2023**

2026–ம் வருடம் பிப்ரவரி திங்கள் 18–ம் நாளன்று வாதி தரப்பு சாட்சியாக வா.சா.1–வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்.** | : | **பரமசிவம்** | **தொழில்** | : | |
| **த/பெ.** | : | | **வட்டம்** | : | |
| **முகவரி** | : | | **மதம்** | : | |
| **ஜாதி** | : | | **வயது** | : | |

**முதல் விசாரணை:–**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். கடந்த 23.06.1995 ஆம் தேதிய 2 ஆம் பிரதிவாதியின் பெயரில் உள்ள கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 10.12.1995 ஆம் தேதிய 1 ஆம் பிரதிவாதியின் பெயரில் உள்ள கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 04.12.1995 ஆம் தேயித 2 ஆம் பிரதிவாதி, 1 ஆம் பிரதிவாதி பெயரில் ஏற்படுத்தி கொடுத்த பொது அதிகாரப் பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 03.03.2023 ஆம் தேதிய 1 ஆம் பிரதிவாதி, வாதிக்கு ஏற்படுத்திக் கொடுத்த கிரைய ஒப்பந்த பத்திரம் அசல்

வா.சா.ஆ.4. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 23.06.2023 ஆம் தேதிய பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.5. ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1 ஆம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ.6. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 24.06.2023 ஆம் தேதிய 2 ஆம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திரும்ப அனுப்பப்பட்டதற்கான அஞ்சலக உறை அசல் வா.சா.ஆ.7. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 29.06.2023 ஆம் தேத கிரையம் செய்வதற்காக கரூர் நெ.1 இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ததற்காக வழங்கப்பட்ட டோக்கன் அசல் வா.சா.ஆ.8. ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்குப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.18 18:28:55 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.